RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s22221

OPEN ACCESS

# தமிழர் மரபில் சிவ வழிபாடு

**மு. சுபாஷினி [அ, *]**

[அ] தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Worship of Shiva in Tamil Tradition

**M. Subhashini [a, *]**

[a] Department of Tamil, National College (Autonomous), Tiruchirapalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: sofi.kaavya@gmail.com

Received: 27.09.2022
Revised: 01-11-2022
Accepted: 06-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

The worship of Lord Shiva is very ancient in Tamil Nadu. The old temples were renovated. The methods of worship were modified to make the minds of the people happy. The devotees began to serve in the temples. People engaged themselves in the service of sweeping and cleaning the temple, garlanding it, setting up a garden, etc. In the temples, they sang the Thevara Pathigam (The first seven of the twelve hymns chanted on the Saiva Deity Lord Shiva). The practice of singing and worshipping the Lord began. Lord Shiva has been worshipped by the people in a very special way from the time of the kings till date. This article is intended to explore the Worship, Ceremonies, Fasting, and Greatness of Sacred Ash (Thiruneeru), the dances of Lord Shiva, and the specialties of the temple.

**Keywords:** Lord Shiva, Temple, Ancient Tamil Tradition, Thiruneeru, Thevara Pathigam

## முன்னுரை

பண்டைய காலம் முதல் தற்காலம் வரை மக்கள் கடவுள் நம்பிக்கை உடையவராக விளங்குவதற்குக் காரணம் தமக்கு நிகழும் அனைத்திற்கும் ஏதோ சக்தி தான் காரணம் என்ற ஆழமான நம்பிக்கையே ஆகும். ஆதி மனிதன் முதன் முதலாக இயற்கையையே வழிபட்டான். இயற்கையால் மட்டுமே தங்களை ஆக்குவதற்கும் அழிப்பதற்கும் வலிமை உண்டென்று மனதார எண்ணினான். எனவே தமக்குத் தீங்கு விளைவிக்காமல் பாதுகாப்பதற்காகத் தம்மைச் சுற்றியுள்ள அனைத்தையும் தெய்வமாக வழிபடத் தலைப்பட்ட காலமே வழிபாடு தோன்றிய காலம் எனலாம். மக்கள் வாழுகின்ற இடத்திற்கேற்ப தெய்வங்கள் முதன்மை பெற்றன. தெய்வ வழிபாட்டை இருபெரும் பிரிவுகளாகப் பிரித்தான். அவை சிறுதெய்வ வழிபாடு மற்றும் பெருந்தெய்வ வழிபாடு என்பதாகும். பெருந்தெய்வ வழிபாட்டில் சிவன், திருமால், பிரம்மன், முருகன், என்று வகைப்படுத்தலாம். அவற்றுள் உலகில் தோன்றிய தெய்வங்களுள் முழுமுதற் கடவுளான சிவபெருமானின் வழிபாட்டைப் பற்றி ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## வழிபாடு

“வழிபாடு” என்பதன் பொருள் வழிபடுதல் என்பதாகும். வழிபாடு என்பதற்கு அப்பியாசம், ஆராதனை, தாழ்வை, வணக்கம், வழிபடல், பின்பற்றல், சமயக்கோட்பாடு, வழக்கம், பூசனை எனப் பல்வேறு பொருள்களில் வழங்கப்படுகின்றமையை அகராதிகள் தெரிவிக்கின்றன. திருக்கோயில் வழிபாடு என்பது மனிதனை இறைவனோடு இணையச் செய்யும் இணைப்புச் செயலாக அமைகின்றது.

வழிபாடுகள் இறைவனின் நினைவை மனிதனின் மனத்தில் ஏற்படுத்தவும் இறைவனின் அருளைப் பெற்றுய்வதற்கும் வாய்ப்பாக அமைகின்றன. மனிதன் பொய்யான உலக வாழ்வில் அமிழ்ந்து மயங்கிடாமல் காத்து, அவனது அறியாமையை நீக்கி அகந்தையை அடக்கி, ஞானத்தைத் தந்து, தெய்வத் தன்மையைத் தலையெடுக்கச் செய்து திருவருளுக்குப் பாத்திரமாக்குகிறது இறைவழிபாடு.

"ஒருபய னாவ துடம்பின்

பயனே

தருபயனாஞ் சங்கரனைச்

சார்" (Venkatasami Nattar, 2017)

மனித பிறவி எடுத்ததே அந்த இறைவனைச் சார்ந்து வணங்கி வழிபடுவதற்கே என்று ஔவையார் தம் பாடல்களின் வாயிலாக உரைக்கின்றார். மேலும் மாசு (குற்றம் அல்லது அழுக்கு) இல்லாத உடம்பே இறைவன் வாழுமிடமாகும் என்பதை,

"மாசற்ற கொள்கை மனத்தி

லடைந்தக்கால்

ஈசனைக் காட்டு முடம்பு" (Venkatasami Nattar, 2017)

## சிவன்

சிவன் என்ற சொல்லுக்குப் பொருள் சிறப்பும், வனப்பும் உடையவன் என்று சித்தாந்த சைவம் குறிப்பிடுகிறது. சிவன் என்ற சொல்லுக்குத் தூய்மையானவன் அல்லது தூய்மைப்படுத்துபவன் என்றும் பொருள்படும். பழங்காலத்தில் சிவனை வணங்கியவர்கள் உருவம் இல்லாத ஓர் அடையாளத்தை வைத்து வணங்கினார்கள். சிவன் உருவமில்லாத அந்த அடையாளத்திற்குப் பெயர்தான் இலிங்கம். சிவலிங்கத்திற்குத் தமிழர் வழங்கி வந்த பெயர் "கந்தழி" என்பது. லிங்கம் என்ற பெயர் பிற்காலத்தில் வழங்கத் தொடங்கிய பிறகு கந்தழி என்பது மறைந்துவிட்டது. கந்தழியாகிய சிவவழிபாடு மிகத் தொன்மையானது.

"சிவாய நம என்று சிந்தித்

திருப்போருக்கு

அபாயம் ஒருநாளும் இல்லை" (Venkatasami Nattar, 2017)

சங்க இலக்கியத்தில் சிவன் என்ற சொல் இடம்பெறவில்லை. அதற்குப் பதிலாக ஆதிரையான், ஆலமர் செல்வன், ஆனேற்றுக் கொடியுடையான், ஈசன், ஈர்ஞ்சடை அந்தணன், காலக்கடவுள், தாழ்சடைப் பெரியோன், நீலமணி வாலிழை பாகத்து ஒருவன், மணிமிடற்றன், முக்கட் செல்வன் என்ற பெயர்களால் அழைக்கப் பெறுகிறான். தேவார பதிகங்களில் "சிவன்" என்ற சொல் பல இடங்களில் கையாளப்படுகின்றன. சிவன் அருவுருவானவன் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் உருவங்கள் வைத்து வழிபடும் மரபு மறைந்து லிங்கங்கள் சிவன் கோயில்களில் கருவறைப் படிமமாக அமைக்கப்பட்டன. பிறப்பும், இறப்பும் இல்லாத பரம்பொருளாததால் "பரமசிவன்" என அழைக்கின்றனர். இதனைச் சிலப்பதிகாரம் "பிறவா யாக்கைப் பெரியோன்" எனக் குறிப்பிடுகிறது.

"சிவம்" என்றால் அன்பு, இன்பம், மங்களம் என்று பொருள். அன்பாக அருட்பெருஞ்சோதியாக இன்பமாக, மங்களமாக மறைப்பொருளாக எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அந்தப் பரமனைக் கடல் கொஞ்சும் குமரி முதல் கைலைப்பனிமலை வரை ஆலயங்கள் பலவற்றில் அமர்த்தி வழிபட்ட பெருமை மிக்கவர் தமிழர்கள். சிவவழிபாட்டின் சிறப்புகளை வேதங்கள் விளக்குகின்றன.

## சிவனின் பெருமை

பண்டைக் காலத்தில் மக்கள் பெரிதும் வழிபட்ட தெய்வம் சிவனேயாகும். மூவேந்தர்களும் பெரும்பாலும் சைவ சமயத்தவராகவே இருந்தனர். சிலப்பதிகாரத்தில் மாமன்னர் சேரன் செங்குட்டுவன் சிவனருளாலே பிறந்தவர் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். சிறந்த சிவபக்தரான செங்குட்டுவன் போருக்குச் செல்லும்போது பரமேஷ்வரரை வணங்கி அவர்தம் திருவடியைத் தன் சிரசில் வைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

"நிலவுக்கதிர் முடிந்த நீளிருஞ்

சென்னி

உலகுபொதி உருவத்து

உயர்ந்தோன் சேவடி" (சிலம்பு. 26: 54-57)

என்ற பாடலடிகள் அறிவுறுத்துகின்றன. ஔவையார் அதியமானை வாழ்த்தும்போது சிவபெருமானைப்போல என்றும் நிலைத்து வாழ்வாயாக என்று வாழ்த்துகிறார்.

"பால் புரை பிறை நுதற் பொலிந்த

சென்னி

நீலமணி மிடற்று ஒருவன் போல

மன்னுக பெரும நீயே" (புறம்.91 : 5-7)

சைவர்கள் சிவனைப் பெரிதும் போற்றி வழிபட்ட செய்தியை,

"சித்தத்துள் தித்திக்கும் தேனே, ஆனந்தக் கனியே" என்று திருமாளிகைத் தேவரும், "கரையிலா கருணை மாகடலை" என்று சேந்தனாரும், "தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம், அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வம் என்று வள்ளல் பிரானும்" அன்பின் வடிவாகிய சிவபெருமானை வழிபடுகின்றமையை அறிய முடிகிறது.

"முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னா" (ந.மு. வேங்கடசாமி நாட்டார், இன்னா நாற்பது, பா.1)

என்ற பாடலடி மூன்று கண்களை உடைய சிவபெருமானை வணங்காதவர்களுக்குத் துன்பம் உண்டாகும் என்றுரைக்கிறது.

மேற்சொன்ன சான்றுகளின் வழி மிகப் பழங்காலந்தொட்டே தமிழகத்தில் சிவவழிபாடு பெரிதும் பரவி இருந்ததையும், சிவபெருமானையே முழுமுதல்வனாக தமிழர்கள் வழிபட்டனர் என்பதையும் அறிய முடிகிறது.

## திருநீற்றுப் பெருமை

இறைவன் பெருமையை விளங்க வைக்கும் தன்மையுடையது திருநீறு. இறைவன் சுடலைப்பொடி பூசிச் சுடலையில் ஆடுபவன். இவ்வுலக வாழ்க்கை நிலையாமை உடையது. இறுதியில் சாம்பல் மட்டுமே எஞ்சுவது. இதனை உணர்ந்து ஆணவமின்றி ஆண்டவன் திருவடியை அடைதலே நோக்கமாகக் கொள்வதே ஆன்மாவுக்கு நல்ல வழியாகும். இத்தகைய தத்துவார்த்த திருநீற்றின் பெருமையை ஞானசம்பந்தர் "மந்திரமாவது நீறு" என்று ஆலவாய் பதிகத்தில் அமைத்துக் காட்டுகிறார். பாண்டியனுக்கு வந்த வெப்புநோயை ஞானசம்பந்தர் "மந்திரமாவது நீறு" என்று பாடிப் போக்கினார் என்பதை,

"மந்திரமாவது நீறு வானவர் மேரதுநீறு

சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு

தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு

செந்துவர் வாய்மைபங்கன் திருவாலவாயன் திருநீறே” (சம்பந்தர் தேவாரம், பா.2.66.1)

என்ற பாடலடிகள் திருநீற்றின் பெருமையைத் தெளிவுபடுத்துகின்றன. திருநீறு உள்ளத்தையும், உடலையும் வெண்மையாக்குவது. எனவே “வெண்ணீறு” என்றும் சிறப்பிக்கப்படுகிறது.

“நீறில்லா நெற்றிபாழ்” (Venkatasami Nattar, 2017)

என்று ஔவையார் திருநீறு இல்லாத நெற்றி வீண் என்று கூறுவதன் வழி திருநீற்றின் இன்றியமையாமையை அறிய முடிகிறது.

“பாவங்களைப் போக்குவதால் பசுமம், மேலான செல்வமாகிய முத்திப் பேற்றினைத் தருவதால் விபூதி, சிவதத்துவத்தை உரைப்பதால் பசிதம், உயிர்களின் மலமாசுகளைக் கழுவுவதால் சாரம், உயிர்களைத் துன்பத்திலிருந்து காப்பதால் “இரட்சை” என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.” என்று பேரூர் புராணம் கூறுவதாக சீர்காழி வி. இராம்தாஸ் குறிப்பிடுகின்றார் (Ramadhas, 2010).

## சிவ விரதங்கள்

சிவபெருமானுக்குச் சைவர்கள் எட்டுவகையான விரதங்களை இருந்து வழிபாடு செய்கின்றனர். இவ்விரதங்கள் வழியாக சிவனின் முழுமையான அருளினைப்பெற இயலும் என்று நம்புகின்றனர்.

- சோமவார விரதம் - திங்கட்கிழமைகளில் இருப்பது.
- உமா மகாசுவரவிரதம் - கார்த்திகை பௌர்ணமியில் இருப்பது.
- திருவாதிரை விரதம் - மார்கழி மாதத்தில் இருப்பது.
- சிவராத்திரி விரதம் - மாசிமாதம் அமாவாசை தினத்தில் இருப்பது.
- கல்யாண விரதம் - பங்குனி உத்திரத்தன்று கடைபிடிப்பது.
- பாசுபத விரதம் - தைப்பூசத்தில் வருவது.
- அட்டமி விரதம் - வைகாசி மாதத்தில் பூர்வபட்ச அஷ்டமி தினத்தில் வருவது.
- கேதார கௌரி விரதம் - ஐப்பசி அமாவாசையை ஒட்டி வருவது.

தமிழ்நாட்டில் சிவதத்துவம் சைவசித்தாந்தம் என்று விளங்குகின்றது.

“சிவத்திற்கு மேல் தெய்வமில்லை

சித்திக்கு மேல் சாத்திரமில்லை

சைவத்தின் மேல் சமயம் வேறில்லை” (Sekar, 2018)

என்பன முன்னோரின் வாக்கு. பழமையும், பெருமையும் தனதாகக் கொண்ட சைவ சமயம், சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சீர்மையுடையது என்பதை இதன் வழியாக உணர முடிகிறது.

## பிரதோஷ விரதம்

ஒவ்வொரு மாதமும் அமாவாசை, பௌர்ணமி இவற்றையடுத்து பதினான்கு பிறைகள் வருகின்றன. ஒவ்வொரு பதிமூன்றாவது பிறை நாளும் திரயோதசி எனப்பெறுகிறது. இந்த நாளே “பிரதோஷம்” எனப்பெறும். பிரதோஷ விரதம் பின்பற்றுவதற்கான காரணம் அமுதம் பெறுவதற்காக தேவர்கள் அசுரர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபோது முதலில் தோன்றியது “ஆலகால விஷம்” ஆகும். அந்த ஆலகால நஞ்சை இறைவனிடம் நந்தி எடுத்து வந்தது. ஆனால் நஞ்சின் கொடுமை தாக்குப் பிடிக்க முடியாமல் நந்தி மயங்கி விழுந்தது. பிறகுச் சுந்தரர் அந்நஞ்சினை இறைவனிடம் கொண்டு சேர்த்தார். இறைவன் நஞ்சினை உட்கொள்ளும்போது அதைப் பார்த்து பதறிய பார்வதிதேவி இறைவனின் கழுத்தைப் பிடிக்க நஞ்சு கண்டத்திலே நின்று நீலநிறமாக மாறுகிறது. அன்றிலிருந்து இறைவன் “நீலகண்டன்” என்று அழைக்கப்படுகிறார். இதனைச் சம்பந்தர்,

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்" (ஞானசம்பந்தர் தேவாரம், கோளறு பதிகம், பா.1)

"நஞ்சுண்டு கறுத்த கண்டி" (சிலம்பு. 12.57)

எனும் பாடலடிகள் வாயிலாக இறைவன் நஞ்சுண்டு உயிர்களைக் காத்தமையை அறியலாம்.

நந்தியை நஞ்சிலிருந்து காக்க அரிசியும், வெல்லமும் கலந்த கலவையே படைக்கப்படுகின்றது. அரிசியும், வெல்லமும் சிவசக்தியைக் குறிப்பவையாகும். எல்லா உயிர்களையும் காக்கும் பொருட்டு இறைவன் நஞ்சுண்ட நாளையே மக்கள் பிரதோஷ விரதமாக மேற்கொள்கின்றர்.

## பிரதோஷ பலன்

நஞ்சு போன்ற கொடிய துன்பம் கவலை தரும் காரியங்களிலிருந்தும், நோய்களிலிருந்தும், அபவாதங்களிலிருந்தும் பிரதோஷ விரதம் காக்கும் என்பது தமிழரின் நம்பிக்கை ஆகும்.

## முக்கடவுளர்

"தமிழ்நாடு கன்னியாகுமரிக்கு அருகில் உள்ள சுசீந்திரம் "மும்மூர்த்தி தலம்" எனப்படுகிறது. இங்கு "தாணுமலயன்" (தாணு+ மால் + அயன்) என்ற பெயரில் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களின் கடவுளர்கள் ஒன்றிணைந்து உள்ளனர். இதனைச் சக்திபீடங்களுள் ஒன்று என்றும் கூறுவர். தாணு என்றால் சிவன், மால் என்றால் திருமால், அயன் என்றால் பிரம்மன் என்பது பொருளாகும்" என்கிறார் சீர்காழி வி. இராமதாஸ் அவர்கள் (Ramadhas, 2010).

## ஆலயச் சிறப்பு

சுசீந்திர ஆலயத்தில் நடைபெறும் ஒவ்வொரு பிதோஷ விழாவிலும் இடப வாகனத்தில் சிவபெருமானும், கருட வாகனத்தில் திருமாலும் இணைந்து ஆலய பிரகாரத்தில் பவனி வருவது குறிப்பிடத்தகுந்ததாகும்.

## கார்த்திகைத் திருவிழா

திருக்கார்த்திகை திருவிழாவானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழகத்திலும், கேரளத்திலும் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்விழாவானது முக்கியமான திருவிழா என்பது அகநானூற்றாலும், ஔவைப்பிராட்டியாரின் பாடல்களாலும், ஞானசம்பந்தர் திருப்பதிகத்தாலும் தெரிகிறது.

கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரமும், சந்திரனும் இணைகிற பௌர்ணமி நாளில் கார்த்திகைத் தீபத் திருவிழா நடைபெறும். பஞ்ச பூதங்களை வழிபடுவதற்காகக் கார்த்திகை விழா கொண்டாடப்பட்டாலும் அக்னி பகவானுக்குத்தான் சிறப்பிடம் அளிக்கப்பெறுகிறது. இந்நாளில் அனைத்து வீடுகளிலும் தீபம் ஏற்றப்படுகிறது.

"வளைக்கை மடநல்லார் மாமயிலை

வண்மறுகில்

துளக்கில் கபாலீச் சரத்தான்தொல்

கார்த்திகைநாள்

தளத்தேந் திளமுலையார் தையலார்

கொண்டாடும்

விளக்கீடு காணாதே போதியோ

பூம்பாவாய்" (ஞானசம்பந்தர், திருமயிலாப்பூர்ப் பதிகம், பா.3)

என்ற பாடலடிகள் வளைகள் அணிந்த பெண்கள் வாழும் வீதிகளில் கலக்கமற்ற திருக்கபாலீச்சரத்து இறைவனின் தொன்மையான விழாவான திருக்கார்த்திகை நாளில் மாதர்கள் விளக்கேற்றுவதைக் காணாமல் போகலாமா! என்று கார்த்திகை தீபம் ஏற்றும் செய்தியை திருமயிலாப்பூர்ப் பதிகம் விளக்குகிறது.

திருக்கார்த்திகைத் திருநாளுக்கு இரண்டு சிறப்புகள் உள்ளன. திருக்கார்த்திகைத் திருநாளில்தான் பரமேஷ்வரர் பிரம, விஷ்ணுக்களால் அடிமுடி அறிய முடியாத லிங்கோத்பவராகத் திருவடிவம் கொண்டார். மற்றொரு சிறப்பு திருக்கார்த்திகைத் திருநாளன்று முருகப்பெருமான் அவதாரம் செய்த நாளாகும்.

இறைவனின் அடிமுடி காண்பதற்காகவே திருமால் பன்றி வடிவெடுத்து பூமித்தோண்டிச் சென்றார். பிரம்மன் அன்னப் பறவை வடிவம் கொண்டு விண்ணில் பறந்து மேலே சென்றார். சிவனின் அடியையும், முடியையும் இருவராலும் காண இயலவில்லை.

"சிவன் கோயில்களில் லிங்கோத்பவருக்கு மேல் பகுதியில்

பறவையாகப் பறக்கின்ற பிரம்மனும், கீழ்ப்பகுதியில்

பன்றியாகப் பூமியைத் தோண்டுகின்ற திருமாலும்

இருப்பதைக் காண முடியும்."

என்று இராம்தாஸ் அவர்கள் தம் நூலில் குறிப்பிடுகின்றார் (Ramadhas, 2007).

## கார்த்திகை விரத பயன்கள்

பலி மகாராஜன் கார்த்திகை விரதம் இருந்து தன் உடலில் உள்ள வெப்பத்தைத் தணித்துக் கொண்டான். மகிஷனை வதம் செய்தபோது தெரியாமல் சிவலிங்கத்தின் மீது மோதியதால் ஏற்பட்ட பாவத்தினைப் போக்கிக் கொள்ள பார்வதி தேவி கார்த்திகை விரதம் இருந்ததாகப் புராணங்கள் கூறுகின்றது.

கார்த்திகை தீபம் ஏற்றும்போது தீபத்தின் ஒளி காணும் இடத்தில் லட்சுமி மங்களம் பொங்க வாசம் புரிவாள் என்பது ஐதீகம். எனவே தமிழர்கள் வழிபாட்டில் கார்த்திகை தீபம் மிகவும் சிறப்பான முறையில் இன்றளவும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## மஹா சிவராத்திரி

தமிழர்களின் வழிபாட்டு முறையில் "மஹா சிவராத்திரி" விழாவும் ஒன்றாகும். இவ்விழா மாசி மாத சதுர்த்தசி திதியில் (தேய்பிறை 14) மஹா சிவராத்திரி வருகிறது. சிவாலயங்களில் மட்டுமே இவ்விழா கொண்டாடப்படுகிறது.

திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுக்க முயன்றபோது வாசுகி என்ற பாம்பு வலி தாளாமல் நஞ்சினைக் கக்கியது. நஞ்சினால் உலக மக்களுக்கு ஆபத்து வந்துவிட கூடாது என்பதற்காகச் சிவபெருமான் தானே அதனை உட்கொண்டார். அந்நஞ்சினால் சிவனுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருக்க தேவர்கள் இரவு முழுவதும் கண் விழித்துச் சிவனையே வேண்டினர். அந்த இரவே "சிவராத்திரி" எனப்பட்டது.

உலக மக்களும் தங்களின் பாவ இருளிலிருந்து விடுபட வேண்டுமென்று சிவனை நினைத்து இரவு முழுவதும் கண்விழித்து வழிபடுகின்றனர். சிவராத்திரியில் நான்கு காலப் பூஜையில் வழிபட்டு பேறு பெற வேண்டும் என்றே சிவராத்திரி கொண்டாடப்படுகின்றது.

## சிவக்கூத்துகள்

சிவபெருமான் திருநடனம் புரிபவன். மற்ற எந்தத் தெய்வங்களுக்கும் இல்லாத சிறப்பாகும். உலகில் அதர்மம் தலைவிரித்து ஆடும்போது தர்மத்தை நிலைநாட்டுவதற்கு இறைவன் கூத்தாடி அழிப்பான்.

"சிவன் பல வடிவங்களைக் காட்டியும், ஒடுக்கியும்
எல்லாவற்றையும் அழித்து நின்று ஆடுபவன். அக்கூத்து
"கொடுகட்டி" எனப்படும். அவன் முப்புரங்களை அழித்து அசுரர்
வெந்து வீழ்ந்த நீற்றை அணிந்து ஆடுங்கூத்துப் "பாண்டரங்கம்"
எனப்படும். அக்கடவுள் புலியைக் கொன்று அதன் தோலை உரித்து
கொன்றைமாலை தோளிலே அசையப் பிரம்மன் தலை ஒன்றை ஏந்தி
ஆடுங்கூத்துக் "கபாலம்" எனப்படும்" (Rasamanikkanar, 1958)

என்று மா. இராசமாணிக்கனார் தம் நூலில் குறிப்பிடுகின்றார். மக்களைக் காக்கும் சக்தி இறைவனே ஆவான் என்ற காரணத்தினாலே ஆதி காலம் முதல் இறைவழிபாட்டு முறையைத் தொன்று தொட்டுக் கடைபிடித்து வருகின்றனர் தமிழர்கள் என்பதை இதன்வழி அறிய முடிகிறது.

## முடிவுரை

பழங்காலம் முதல் இன்று வரை மக்கள் இறைவனின் வழிபாட்டு முறையை மேற்கொள்கின்றனர். உலகத்திலுள்ள அனைத்து உயிர்களையும் காப்பாற்றும் வல்லமை படைத்தவன் இறைவனே ஆவான். உலகின் முழுமுதற் கடவுளாக விளங்கும் சிவபெருமானை வழிபடுவது மிகவும் தொன்மை காலத்திலிருந்தே மக்களிடம் நிலவி வருகிறது என்பதற்கு இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. அதனாலேயே சிவவழிபாடுகளான கார்த்திகை, பிரதோஷம், சிவராத்திரி விழா போன்ற விழாக்களை மக்கள் இன்றளவிலும் சிவாலயங்களில் வழிபட்டு வருகின்றனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

## References

Ramadhas, V. (2007) Vilakkalum Virathangalum, Manivasakar pathippagam, India

Ramadhas, V. (2010) Hindhu matha Vilakkalum Virathangalum, Meyappan Pathippagam, Chidambaram, India

Rasamanikkanar, M. (1958) Saivasamaya Valarchi, Poonkodi Pathippagam, Chennai, India.

Sekar, K. (2018) Thirumuraiyum Thiruneriyum, Ayya Noolagan, Thanjavur, India

Venkatasami Nattar, N.M. (2017) Neethi Noolkal, Tamil Valarchi Thurai, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License